THE HINDU
Region

# Walkathon to be held on World Blood Donor Day

**The Hindu Bureau**
PUDUCHERRY

Jipmer's Department of Transfusion Medicine is hosting month-long events to raise awareness on blood donation, beginning with a walkathon on June 14.The walkathon from Rajiv Gandhi Women and Children Hospital to the Jipmer playground is scheduled to begin at 6.30 a.m. Gautam Roy, Director (Ag.) Jipmer, L. N. Dorairajan, Medical Superintendent and S. Chitradevi, Project Director, Pondicherry AIDS Control Society will flag off the walkathon.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
13.6.2024 (வியாழக்கிழமை)

# ரத்ததான விழிப்புணர்வு நடைபயணம்

## நாளை நடக்கிறது

புதுச்சேரி, ஜூன்.13-

புதுச்சேரி ஜிப்மர் ரத்த பரிமாற்றத்துறை விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ரத்த வகைகளை கண்டுபிடித்த கார்ல் லேன்ஸ்டைனர் பிறந்த நாளான ஜூன் 14-ந்தேதி, உலக ரத்த கொடையாளர்கள் தினம் ஆகும். இந்த வருடம் ஜிப்மரின் ரத்த பரிமாற்ற மருத்துவத்துறை புதுவை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் தன்னார்வ ரத்ததான முகாம்களை உள்ளடக்கிய ஒரு மாத கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

அதன் ஒரு பகுதியாக நாளை (வெள்ளிக்கிழமை) காலை 6.30 மணிக்கு ராஜீவ்காந்தி பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை முதல் ஜிப்மர் விளையாட்டு மைதானம் வரை ரத்ததான விழிப்புணர்வு நடைபயணம் நடைபெற உள்ளது. நடைபயணத்தை ஜிப்மர் இயக்குனர் (பொறுப்பு) டாக்டர் கவுதம் ராணு, மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன், புதுவை எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குனர் சித்ராதேவி ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.